

# கவலையில்லாத மனிதன்

# கதைச் சுருக்கம்

முத்து ஒரு கவலையில்லாத மனிதன். பிறர் கவலையைத் தீர்ப்பதையே தன் இலட்சியமாகக் கொண்டவன். ஆனால் அவனது அண்ணன் மாணிக்கமோ, பிறருக்குக் கவலையை உண்டாக்குவதையே தனது கடமையாகக் கருதுபவன். இவ்விர் அதிசயப் பிறவிகளைப் பெற்ற ஜம்புலிங்கமோ பணத்தையே பெரிதாகக் கருதுபவர்.

ஜம்புலிங்கம் தன் மகன் மாணிக்கத்திற்குத் திருமணம் செய்து வைக்க, பரமசிவத்தின் மகள் சிவகாமியை ஏற்பாடு செய்கிறார். ஆனால், சிவகாமியோ தன் வீட்டிலிருக்கும் தாமோதரனைக் காதலிக்கிறாள். மாணிக்கத்தினால் காதலித்துக் கைவிடப்பட்ட காவேரி, சிவகாமியின் ஆதரவில் இருந்து வருகிறான். இது விபரங்கள் முத்துவுக்குத் தெரிய வருகின்றன.

தன் அண்ணனால் கைவிடப்பட்ட காவேரியை மாணிக்கத்திற்குத் தெரியாதபடி மணப் பெண்ணாக்கி திருமணத்தை வெற்றிகரமாக முடிக்கிறான் முத்து. காவேரியைக் கண்டு கொண்ட மாணிக்கம், அவளை வீட்டைவிட்டு விரட்டி விடுகிறான்.

அண்ணியைத் தேடித் திரிந்த முத்து, பாழ் மண்டபம் ஒன்றில் பிரசவ வேதனையே யுத் தவித்துக் கொண்டிருந்த காவேரியைச் சந்திக்கிறான். காவேரிக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. அண்ணியையும் குழந்தையையும் அழைத்துச் செல்லும்படி அண்ணனிடம் கெஞ்சுகிறான் முத்து. மாணிக்கம் மறுத்துவிட்டுச் சென்று விடுகிறான்.

முத்துவுக்குக் கவலையைத்தர விரும்பாத காவேரி, தன் மாமன் கல்லானைச் சந்தித்து அவன் ஆதரவில் இருந்து வருகிறாள்.

காவேரியின் குழந்தைக்குச் சிங்கப்பூர் லாட்டரியில் முதல் பரிசு கிடைத்திருக்கிற விபரமறிந்த மாணிக்கம், காவேரியைத் தேடி வருகிறான். முத்து டிக்கட்டைத் தர மறுத்து விடுகிறான். மாணிக்கம் குழந்தையைப் பறித்துச் சென்று விடுகிறான். காவேரி பிரமை பிடித்தவளாகிறாள்.

நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. மாணிக்கம் தன் குழந்தைக்குக் கிடைத்த பரிசுத் தொகை தன்னைச் சேரவேண்டுமென வாதாடுகிறான். முத்து அதை எதிர்த்து வாதாடுகிறான்.

முடிவில்......?

காவேரியின் கதி என்ன?

வெற்றி யாருக்கு?

விடை திரையில்.

P. SUNDARAM, NEWS AGENCY
AGENT.
KALAI
CINEMAKADIR
GUNDOOSI
KORANAD, MAYURAM.

# கவலை இல்லாத மனிதன் பாடல்கள்

## பாட்டு 1

இயற்: கண்ணதாசன் பாடி: சந்திரபாபு

கவலை இல்லாத மனிதன்
உலகத்தை யறிந்தவன் துணிந்தவன்—அவனே
கவலை இல்லாத மனிதன்
போவதைக் கண்டு கலங்காமல்
வருவதைக் கண்டு மயங்காமல்
மெய் தளராமல் கை நடுங்காமல்
உண்மையைப் பொய்யை உணர்ந்தவனே (உலகத்)

வாழ்க்கை என்பது நாடகமே
வந்து போனவர் ஆயிரமே
கொண்டு சென்றவர் யாருமில்லை
கொடுத்துப் போனதும் நினைவுமில்லை
அந்த நாடகமின்னும் முடியவில்லை
மறுநாளைக்கு வருவதும் தெரியவில்லை (உலகத்)

வாழ்வை யறிந்தவன் சம்சாரி
வாழப் பயந்தவன் சந்நியாசி
கண்ணீர் வடிப்பவன் மூடனடா
காலத்தை வென்றவன் வீரனடா
நல்லின்பத்தைத் தேடி உறவாடு
நீ எழுந்திரு மனிதா விளையாடு (உலகத்)

## பாட்டு 2

இயற்: கண்ணதாசன் பாடி: மகாலிங்கம்

நான் தெய்வமா?—இல்லை
நீ தெய்வமா?
நமக்குள்ளே யார் தெய்வம் நீ சொல்லம்மா (நான்)

எனக்கென்று தந்தை தாய் யாருமில்லை
உனைப் பெற்ற தாயாருக்குப் பேருமில்லை
பசி—எடுத்தாலும் எனக்கேதும் தருவாரில்லை
பிறர்—கொடுத்தாலும் தாய் உனக்குப் பசியே இல்லை (நான்)

பணம் காசு கடன் தந்து வீட்டை எடுத்தான்—உனக்குப்
பால்பழம் கடன் தந்து கண்ணை மறைத்தான்—இனி
நடைபாதை தனில் எந்தன் திருநாளம்மா—அது
நடமாட முடியாத உனக்கேதம்மா? (நான்)

## பாட்டு 3

இயற்: கண்ணதாசன் பாடி: ஜமுனாராணி

காட்டில் மரம் உறங்கும்
கழனியிலே நெல் உறங்கும்
பாட்டில் பொருள் உறங்கும்
பாற் கடலில் மீன் உறங்கும்
காதல் இருவருக்கும் கண் உறங்காது—அதில்
காதலன் பிரிந்து விட்டால் பெண் உறங்காது
(காட்டில்)

அலை—பொங்கும் கடல் ஓரம்
மதி—தங்கம் சிந்தும் நேரம்
அங்கும் இங்கும் ஓடும்
துணை—எங்கே என்று தேடும்
மலர்க்—கண்ணால் அதைக் கண்டால்
உள்ளம் சங்கீதங்கள் பாடும்
நல்ல சுகம் நாடும்
நாடகம் ஆடும் (காட்டில்)

வளர்—காலம் செல்லும் வேகம்
அதில்—காதல் மாறும்போதும்
மானம் என்னும் செல்வம்
பெண்—வாழ்வில் நின்று காக்கும்
ஒன்றே உள்ளம் என்றும் அது
ஒன்றாய் நின்று வாழும்
காதலர் வாழ்க
வாழ்கெனப் பாடி (காட்டில்)

## பாட்டு 4

இயற்: கண்ணதாசன் பாடி: பி. சுசிலா

சிரிக்கச் சொன்னார் சிரித்தேன்
பார்க்கச் சொன்னார் பார்த்தேன்

எனக்கென ஓர் உணர்ச்சி இல்லை தோழி—காதல்
இன்னமுதே வாழிய நீ வாழி! (சிரிக்க)

இதயம் காட்டும் கண்ணாடி வதனமில்லையா
இரு விழிகள் படைத்திருந்தும் ரியவில்லையா
சிதறி வரும் வார்த்தைகளில் தெரியவில்லையா
சிந்தையிலே தெளிவுடையோர் யாருமில்லையா? சிரிக்க)

ஆடையின்றி கேட்டவுடன் தந்தவர்தானே
அணிமணிகள் வகைவகையாய்ச் செய்தவர்தானே
அழகுமகள் இளமை கண்டு மகிழ்ந் வர்தானே
ஆளைககண்டு சேர்த்துவைக்க மறந்ததும் ஏனோ? (சிரிக்க)

## பாட்டு 5

இயற்: கண்ணதாசன் பாடி: சௌந்தரராஜன், ஜிக்கி, குழு

கண் கொடுத்தது போல உனக்கு
பெண் கொடுத்தோம் சாமி
ஆஹா சாமி— வளை
கை விடாம காலமெல்லாம்
காக்க வேணும் சாமி
ஆஹா சாமி (கண்)

ஜாதிவிட்டு ஜாதி கொண்டா
பொறுப்பதில்லை பூமி
சமூக பழக்கத்தை நீ
மாத்திப்புட்டே சாமி—பலர்
பேசுவாங்க செய்வதில்லே
பேசாமே நீ செய்து முடித்த சாமி (கண்)

வந்தவேளை விருந்து வைக்க
வழியுமில்லே சாமி—எங்க
வாசலிலே நிமிர்ந்து வந்தா
தலை யிடிக்கும் சாமி (கண்)

மேலே வானம் கீழே பூமி
இடையில் எங்க வீடு
மெத்தையுமில்லே கட்டிலுமில்லே
அப்புறம் உங்க பாடு (கண்)

நாகரிகப் பையும் மையும்
நாங்க பார்த்ததில்லே—நம்ம
நாட்டுமக்கள் குல வழக்கம்
மறந்து போனதில்லே (கண்)

கத்தது கொஞ்சம் மத்தது பஞ்சம்
களங்கம் இல்லே சாமி—நீ
கை குடுத்தா நாங்ககூட
கத்து நடப்போம் சாமி (கண்)

## பாட்டு 6

இயற்: கண்ணதாசன் பாடி: ஜமுனாராணி

பெண் பார்க்க மாப்பிள்ளை வந்தார்
வந்தார் வந்தாரே (பெண்)

கண்பட்ட மேகமோ கை பட்ட வேகமோ
புண்பட்ட நெஞ்சிலும் புதுமைகள் தோன்றுமோ
எண்ணங்கள் மாறியும் மாறாத சொந்தமோ
பெண்மையின் நீதியில் பண்பட்ட பந்தமோ (பெண்)

வெண் முல்லைச் சோலையில் பொன்வண்டு பாடுமோ
பொன்வண்டு பாடினால் பூந் தென்றல் வீசுமோ
பூந் தென்றல் வீசினால் பருவங்கள் பேசுமோ
பருவங்கள் பேசினால் பலனின்றிப் போகுமோ? (பெண்)

மண் பெற்ற பிள்ளைகள் எண்ணற்ற கோடியே
எண்ணற்ற கோடியில் பெண்மக்கள் பாதியே
பெண் மக்கள் காதலை ஆண்மக்கள் நாடியே
மணமாலை சூடிடும் மேடையைத் தேடியே (பெண்)

## பாட்டு 7

இயற்: கண்ணதாசன் பாடி: சந்திரபாபு

பிறக்கும் போதும் அழுகின்றாய்
இறக்கும் போதும் அழுகின்றாய்
ஒரு நாளேனும் கவலையில்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே (பிறக்கும்)

இரவின் கண்ணீர் பனித்துளி என்பார்
முகிலின் கண்ணீர் மழையெனச் சொல்வார்

இயற்கை அழுதால் உலகம் செழிக்கும்
மனிதன் அழுதால் இயற்கை சிரிக்கும் (பிறக்கும்)

அன்னையின் கையில் ஆடுவதின்பம்
கன்னியின் கையில் சாய்வதுமின்பம்
தன்னை யறிந்தால் உண்மையிலின்பம்
தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம் (பிறக்கும்)

## பாட்டு: 8

இயற்: கண்ணதாசன் பாடி: டி. எஸ் பகவதி, வெங்கடேஷ், குழு

கண்ணோடு விண்பேசும் ஜாடை—வண்ணக்
காவியம் யாவும் உன்மேடை
ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்வெனும் பலத்தை
அன்போடு ஒன்றாக்கும் பார்வை (கண்)

மது—இது—மாது இதுமிதம்
ஒரே போதையில் சதா ஆடலாம்
நாடகம் ஆடலாம் நாளெல்லாம் (மது)
பெற்றோரே செல்வங்கள் பெற்றார்—ஒரு
பிள்ளையில்லார் என்ன பெற்றார்?
கற்றோரும் மற்றோரும் வற்றாத இன்பங்கள்
ஐயா உன்னைக் கண்டு பெற்றார் (கண்)
இங்கு வந்தவர் ஏழையாயினும்
செல்வராயினும் ஒன்றே
பங்கு கொண்டபின் மனிதர் யாவரும்
கவிஞர் ஆவதும் இங்கே
துன்பம் என்பதே இல்லை
இது இன்ப பூமியின் எல்லை
அது—எது—இது—மது—மாது (மது)
கொண்டோரைத் தான் நம்பி வந்தேன்—அவர்
குடியோடு உறவாகிக் கொண்டார்

அன்றாடம் என் நெஞ்சைத் துன்பங்கள் கொன்றாலும்
ஐயா உனை எண்ணி வாழ்வேன் (கண்)

**வணக்கம்.**

# திரைப் பட தனி நாடக

# வசன ஏடுகள்

1. நாடோடி மன்னனில் மனோகரியின் மனப் போராட்டம் வசனம்
2. அன்னையின் ஆணையில் சிவாஜி கணேசன் "சாம்ராட் அசோகன்" நாடக வசனம்
3. பராசக்தியில் கோர்ட் சீன்
4. ராஜா ராணியில் சாக்ரடீஸ் நாடகம்
5. ராஜா ராணியில் சேரன் செங்குட்டுவன் நாடகம்
6. இல்லற ஜோதியில் அனார்கலி நாடகம்
7. மனோகரா படத்தில் தர்பார் சீன் வசனம்
8. தங்கப்பதுமை தர்பார் சீன் வசனம்
9. சிவகெங்கைச்சீமை முக்கிய வசனங்கள்
10. கட்டபொம்மன் முக்கிய வசனங்கள்
11. குறவஞ்சி முக்கிய வசனங்கள்

**ஒவ்வொன்றும் விலை 10 காசுகள்!**

மேலும் அவ்வப்போது வெளியாகும் புதிய படங்களின் சின்ன நாடக வசனப் புத்தகங்களும் கிடைக்கும்.

## ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை-மதுரை-கோவை-திருச்சி-பெங்களூர்.

# மணவிழாப் பரிசு நூல்கள்

**புதியவை:-**

1. திருமண வாழ்த்து
2. இதோ ஒரு புதுமலர்
3. இல்லறத்திற்கேற்ற இன்பப்பரிசு

**மறுபதிப்பு:-**

4. தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி?
5. திருமணத் தம்பதிகளுக்கு
6. இன்புற்று வாழ்க
7. அன்பளிப்பு
8. நான்தரும் பரிசு
9. இல்லறம்
10. வாழ்க மணமக்கள்
11. உங்கள் குழந்தை
12. நல்வாழ்க்கை

## ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1